**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

**Under Section 173 BNSS**

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102151

1. District : Thanjavur PS: V and AC Year: 2024 FIR No: 07/2024 Date: 13.10.2024
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The PC Act 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 09.10.2024 Date to : at about 17.30 hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 13.10.2024 Time : 16.00 hrs, Registered at 18.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 13.10.2024 Time : 16.00 hrs,
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Written Complaint
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Ayyampettai TNEB office, 30 km North East
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr.G.Balamurugan (b) Father's/ Husband's Name : V.Govindharaj
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 01.06.1987 (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Hdfc Life insurance - Associate Circle Head (g) Address : 2/1,3A Agraharam, Soolamangalam, Papanasam Tk, Thanjavur.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr.Manikandan, Revenue Supervisor, TNEB Office, Ayyampettai,

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

Delayed by the complainant

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கிறேன்:-</u>

தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் இன்று 13.10.2024 ஆம் தேதி 16.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது தஞ்சாவூர் பாபநாசம் தாலுக்கா, சூலமங்கலம், 2/1, 3A அக்ரஹாரம், த/பெ V.கோவிந்தராஜ் மகன் கோ.பாலமுருகன் என்பவர் என்முன்பாக ஆஜராகி விபரம் சொல்லி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று அதை படித்து பார்த்து அவரிடம் விபரம் கேட்டு தெரிந்து கொண்டு உடனே அந்த புகார் மனு தொடர்பாக இரகசிய விசாரணை செய்ததில் எதிரி மீது எதிர்மறையான குறிப்புகள் இருந்ததாலும் வாதி மீது நம்பகத்தன்மையான குறிப்புகள் இருந்ததாலும் வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும் சென்னை மத்திய மண்டல ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல்

/தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

G. Balamurugan (signature)

A. Arun Prasad 13/10/24 (signature)

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
14.10.2024 / 09.00 hrs

Name: பெயர் R. ARUN PRASAD
Rank: நிலை Inspector of Police, No. எண் V&AC, Thanjavur.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

**தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு Cr.No.07/2024 U/s 7 of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018) இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-**

தெரிவித்து விட்டு இன்று 13.10.2024 ஆம் தேதி 18.00 மணிக்கு காலம் 7-இல் கண்ட குற்ற அலுவலர் மீது தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 07/2024 U/s 7 of the prevention of Corruption Act 1988 as amended in 2018 இன் படி வழக்குப்பதிவு செய்தேன். வாதி திரு.கோ.பாலமுருகன் அவர்களது புகார் விபரம் பின்வருமாறு:- அனுப்புதல்:- கோ.பாலமுருகன், த/பெ.V.கோவிந்தராஜ், எண் 2/1, 3A அக்ரஹாரம், சூலமங்களம், பாபநாசம் தாலுக்கா, தஞ்சாவூர். செல் நம்பர்:- 9994354474 பெறுதல்:- காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தஞ்சாவூர். ஐயா, நான் பாபநாசம் தாலுக்கா, சூலமங்கலம், அக்ரஹாரத்தில், என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் தஞ்சாசவூர் Hdfc லைப் இன்சூரன்ஸ் கம்பெனியில் Associate Circle Head ஆக பணிபுரிந்து வருகிறேன். எங்களது வீட்டிற்கு சுமார் 1 கிலோமீட்டரில், அய்யம்பேட்டை, சூலமங்கலம் ரோடு, ராஜராஜேஸ்வரி நகரில் எண் 24 என்ற காலி மனை எனது அம்மா ஜெயமணியின் பெயரில் உள்ளதில் நான் முறையாக அனுமதி பெற்று கடந்த ஒரு வருடமாக மாடி வீடு கட்டி வந்தேன். அதற்கான கட்டுமான பணி தற்போது முழுவதுமாக முடிவடைந்து விட்டது. அதில் தரை தளத்திற்கான மின் இணைப்பு எண் 431-002-2422-ஐ வணிக பயன்பாட்டிலிருந்து வீட்டு பயன்பாட்டிற்கு மாற்ற என் அம்மாவிடம் மனுவில் கையெழுத்து பெற்று அதனுடன் வீட்டுவரி ரசீது, என் அம்மா ஆதார் நகல், மின் கட்டண நகல் ஆகியவற்றை இணைத்து எடுத்துக் கொண்டு 07.10.2024-ந் தேதி காலை சுமார் 09.00 மணியளவில் அய்யம்பேட்டை TNEB ஆபிஸ் சென்று அங்கிருந்தவரிடம் விவரம் கேட்டேன். அவர் AE வெளியில் சென்றுள்ளதாக சொல்லி எனது அம்மா பெயரில் உள்ள மனுவை வாங்கிபார்த்து விட்டு AE டேபிளின் மேல் வைத்தார். பின்னர் 09.10.2024-ந் தேதி மதியம் அய்யம்பேட்டை EBயில் இருந்து ஒரு நபர் வந்து வீட்டு மின் இணைப்புக்கு மாற்ற வேண்டிய நான் கட்டியுள்ள வீட்டை பார்த்து விட்டு

அங்கிருந்த என் அம்மாவிடம் ஜெயமணி யாரு என்று கேட்டு உள்ளார். அதற்கு நான் தான் என்று கூறியதும் இந்த மனு யார் கொடுத்தது என்று கேட்டுள்ளார். அதற்கு என் மகன் பாலமுருகன் தான் கொடுத்தார், அவர்தான் இதையெல்லாம் பார்த்து கொள்கிறார் என்று சொன்னதும் EBயில் இருந்து வந்த நபர் என் அம்மாவிடம் உங்க பையனை அய்யம்பேட்டை EB ஆபிசுக்கு வந்து RS–சாரை பார்க்க சொல்லுங்க என்று சொல்லி விட்டு சென்றதாக என் அம்மா எனக்கு தகவல் சொன்னார். அதனால் நான் அன்றைய தினம் மாலை சுமார் 05.30 மணியளவில் அய்யம்பேட்டை EB ஆபிசுக்கு சென்றேன். அங்கிருந்தவர்களிடம் விசாரித்து RS என்கிற வருவாய் மேற்பார்வையாளர் மணிகண்டன் அவர்களிடம் என்னை அறிமுகப்படுத்தி கொண்டு என் அம்மா மனு சம்மந்தமாக அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் Online–இல் சுமார் 450லிருந்து 500/– ரூபாய் வரை கட்டனும், அதை தனியா நீங்க Online–ல அப்புறம் கட்டிக்கிங்க, அது இல்லாம முதல்ல 2000/–ரூபாய் எனக்கு தனியாக தரனும் என்று சொன்னார். அதற்கு நான் இப்போது தான் நான் வீடு கட்டி இருக்கேன் அதுக்கே நிறைய பணம் செலவாயிடுச்சி, ஆன்லைனில் 450, 500 ரூபாய் தான் கட்டனும்னு சொல்றீங்க அப்புறம் எதுக்கு இவ்வளவு பணம் என்று கேட்டேன். அதற்கு அவர் என்னிடம், டேரிப் மாத்தனும்னா நான் சொன்னாதான் மாத்த முடியும், அதனால எனக்கு 2000/– ரூபாய் தனியா கொடுத்தா தான் டேரிப் மாத்த ரெக்கமென்ட் செய்வேன் என்றும், எல்லார்கிட்டேயும் வழக்கமா இது மாதிரி கேட்கிறதுதான், சரி நீங்க வேணும்னா 500 ரூபாய் குறைச்சிகிட்டு 1500/– ரூபாய் கொடுத்தால் தான் நான் டேரிப் மாத்த ரெக்கமென்ட் செய்வேன் என்று கறாராக சொல்லி விட்டு அவர் டேபிளில் இருந்த எனது அம்மாவின் மனுவை என்னிடம் கொடுத்து, இதில் உள்ள TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LTD, REVISED TEST REPORT என்று அச்சடிக்கப்பட்ட மூன்று FORM–இல் உங்க அம்மாவிடம் கையெழுத்து வாங்கிட்டு, அதையும் நான் கேட்ட பணத்தையும் எடுத்துட்டு நாளைக்கு வாங்க என்று சொன்னார். அதற்கு நான் அம்மா ஊருக்கு போயிருக்காங்க, வந்ததும் வாங்கிட்டு வரேன்னு சொல்லிட்டு அதனை பெற்று கொண்டு வந்து விட்டேன். மேற்படி அந்த மனுவில் 07.10.2024 என தேதியிட்டு சுருக்கொப்பமிட்டு அதன் கீழ் RS for na என

ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. அதன்பின் என் அம்மா இன்று 13.10.2024 காலை தான் ஊரில் இருந்து வந்தாங்க. அவங்கிட்ட அவர் சொன்ன மூன்று இடத்தில் கையெழுத்து வாங்கினேன். எனக்கு அவர் கேட்ட லஞ்ச பணம் கொடுக்க விருப்பமில்லை. எனவே,என்னிடம் லஞ்சமாக ரூபாய் 1500/– கேட்ட அய்யம்பேட்டை EB ஆபிசில் வேலை பார்க்கும் வருவாய் மேற்பார்வையாளர் மணிகண்டன் என்பவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த புகாருடன் எனது அம்மாவின் மனு மற்றும் ஆவணங்களின் நகல்களை இணைத்துள்ளேன். இப்படிக்கு (ஒப்பம்) G.பாலமுருகன் தேதி. 13.10.2024. Sir, Received the complaint on 13.10.2024 at 16.00 hrs. The genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found bad. Found prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted. The matter is intimated to the SP/CR, V&AC, Chennai and registered a case in Thanjavur V&AC Cr.No.07/2024 u/s 7 of the P.C Act 1988 as amended in 2018 on 13.10.2024 at 18.00 hrs and took up for investigation. (Sd) R.Arunprasad, Inspector of Police, Vigilance and Anti-Corruption, Thanjavur Detachment. The original FIR along with original complaint is submitted to the court of the Hon'ble Chief Judicial Magistrate/Special Judge, Thanjavur @ Kumbakonam and copies submitted to the concerned officers.

13/10/24

**(R.Arunprasad)**
**Inspector of Police,**
**Vigilance and Anti-Corruption,**
**Thanjavur Detachment.**
**13.10.2024**